Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.60/2018

**Depositions of PW- 6**

| Name | திருமதி.மகேஸ்வரி | Occupation | மருத்துவர் |
|---|---|---|---|
| Husband name | பழனிச்சாமி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of April 2026.

20.04.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் மூத்த உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.07.2016 அன்று மாலை 03.30 மணியளவில் நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது சிவக்குமார் வயது 44 என்பவரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். நான் பரிசோதித்தபோது அவர் உயிரோடு இல்லை என்றும் பிரேத பரிசோதனைக்கு பரிந்துரைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கில் இறந்துபோன மேற்படி நபர் பெயர்பெற்ற வழக்கறிஞர் என்பதை நான் அறிவேன் என்றால் சரியல்ல. நான் அளித்த விபத்து பதிவேட்டில் விபத்தானது 03.15 மணிக்கு நடந்ததாகவும் பிரேதம் 03.30 மணிக்கு மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடமானது மருத்துவமனையிலிருந்து 1 1/2 முதல் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்துஅவர்கள் வந்து பிரேதத்தை எடுத்துக்கொண்டு மருத்துவமனை செல்வதற்கு

15 நிமிடத்திற்குள் இவையனைத்தையும் செய்ய இயலாது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தின் அருகே ஆம்புலன்ஸ் இருந்திருந்தால் 15 நிமிடங்களில் கொண்டுவந்திருப்பார்கள். மேற்படி இறந்த நபர் குடிபோதையில் வாகனத்தை இயக்கி விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் காவல்துறையினரின் அறிவுறுத்தலின்பேரில் மேற்படி நபருக்கு இழப்பீடு பெறவேண்டி மேற்படி சான்றானது வழங்கப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி நபர் மது அருந்தியிருந்தாரா என்பது பற்றி பிரேத பரிசோதனை அறிக்கையில் தான் குறிப்பிடப்பட்டிருக்கும்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.